(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 3(6).]**

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2026 பெப்ரவரி 13, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026 மார்ச் 03, செவ்வாய்க்கிழமை)**

1864/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாணந்துறை, மேற்கு மாலமுல்ல பிரதேசத்தில் இயங்கும் 'பிரசன்ன ஒட்டோ சர்விஸ்' எனப்படுகின்ற தொழில்முயற்சி தொடர்பாக செய்யப்பட்டுள்ள WP/KT/PPA/WP-K/0119/2025 ஆம் இலக்க முறைப்பாடு தொடர்பாக, மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த முறைப்பாட்டுக்கான அடுத்த கட்ட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) முறைப்பாட்டின் விசாரணை தாமதமாவதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாட்டுடன் சம்பந்தப்பட்டதாக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1865/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் உரித்துச் சான்றிதழ் வழங்குவதை அமுல்படுத்துகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(ii) இதுவரை மேற்படி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை யாது;

(iii) உரித்து நிர்ணய திணைக்களத்தின் கீழ் தற்போது சேவையாற்றி வருகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் சட்டரீதியான அந்தஸ்தை இற்றைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், உத்தேச சட்ட மறுசீரமைப்புக்கள் யாவை;

(iii) மேற்படி சட்ட மறுசீரமைப்புக்களை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

1866/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'Clean Sri Lanka' சனாதிபதி செயலணியின் தற்போதைய அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) தற்போதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கருத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி ஒவ்வொரு கருத்திட்டம் வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2024.12.19 ஆம் திகதிய 2415/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் I தொடக்கம் IX வரை விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பணியினதும் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

230/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கு வெளியே அரசாங்கம் சார்பாக வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக, மாகாண அரசாங்க பிரதான குற்றப்பகர்வு அலுவலகங்கள் (Provincial Directorate of Public Prosecution) நிறுவப்படுமென 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கொள்கை சரியானதென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்திற்கு வெளியே இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண அரசாங்க பிரதான குற்றப்பகர்வு அலுவலகங்கள் (Provincial Directorate of Public Prosecution) இதுவரையில் நிறுவப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

460/2025

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதான சில மருந்து உற்பத்திப் பொருட்களின் தரம் தொடர்பில் வேண்டுமென்றே சர்ச்சைகளை உருவாக்குவதன் மூலம், அத்தியாவசிய மருந்து வழங்குநர்களை அபகீர்த்திக்குள்ளாக்குவது மற்றும் மருந்துப்பொருள் விநியோகங்களிலிருந்து அவர்களை அகற்றுவது போன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளில், பல்வேறு காரணங்களினால் 2-8°C வெப்பநிலையில் களஞ்சியப்படுத்த வேண்டிய உயிர்காக்கும் / விலை உயர்ந்த மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மருந்துப்பொருட்களின் தரம் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்துவதன் மூலம் நீண்டகால வழங்குநர்களை அகற்றும் செயற்பாடு பிரதேச வைத்தியசாலைகள் மட்டத்திலும் இடம்பெறுகின்றன என்பதையும்;

(ii) இதன் காரணமாக அவர்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் கேள்விப்பத்திரங்களுக்கு மதிப்பீடுகளை வழங்குவதை நிராகரிக்கிறார்கள் என்பதையும்;

(iii) தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அகற்றப்பட்டுள்ள மருந்துப்பொருட்களின் எண்ணிக்கை, தொகுதிகளை திரும்பப் பெறுதல் அல்லது உற்பத்தி திரும்பப் பெறுதல் குறித்தும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி அகற்றப்பட்ட மருந்துகள் தனியார் சந்தையில் விற்பனை செய்யப்படுவதை அறிவாரா;

(ii) இத்தகைய முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்கக் கூடிய ஏதேனும் பிரிவு உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற இத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

464/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இலங்கைக்கு மீன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை, ஒவ்வோர் ஆண்டிற்குமாக வெவ்வேறாக, மீன்களின் வகை, அளவு, பெறுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் ஆகியவற்றையும்;

(iii) அத்தகைய இறக்குமதிகள் உள்ளூர் நுகர்வுக்காகவா அல்லது மீள் ஏற்றுமதிக்காகவா மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2021 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை ஒவ்வோர் ஆண்டிற்குமாக —

(i) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டது உள்ளூர் நுகர்வுக்காகவெனில், ஈட்டப்பட்ட தீர்வையின் பெறுமதி;

(ii) இறக்குமதி செய்யப்பட்டது மீள் ஏற்றுமதிக்காகவெனில், சேர்க்கப்பட்ட பெறுமதி மற்றும் ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணி;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட கருவாடு, நெத்தலி மற்றும் மாசி ஆகியவற்றின் அளவு, பெறுமதி மற்றும் அவை இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள்;

(iv) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கருவாடு, நெத்தலி மற்றும் மாசி ஆகியவற்றின் அளவு;

(v) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் அளவு மற்றும் பெறுமதி;

(vi) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் அளவு;

ஆகியவை யாவையென்பதை வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

682/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நுரைச்சோலை ‘லக் விஜய’ மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற பங்களிப்பு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறித்த காலப்பகுதியினுள் மேற்படி மின்னுற்பத்தி நிலையம் செயலிழந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் திகதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட செயலிழப்புகள் காரணமாக தொடர்ச்சியான மின்சக்தி வழங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தடைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் தொடர்ச்சியாக செயலிழப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

882/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேசச் செயலாளர் பிரிவில் அரசாங்கத்தினால் ‘அளிப்புப் பத்திரங்கள்’ அல்லது ‘காணி உரிமப் பத்திரங்கள்’ ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

914/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பசுக்களுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதற்காக மேற்படி ஆலோசகர்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உள்ளனரா என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதற்காக கட்டணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஒரு செயற்கை முறைக் கருவூட்டலுக்கான கட்டணம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஆலோசகர் ஒருவர் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர் ஒருவர் செயற்கை முறைக் கருவூட்டல் ஒன்றைச் செய்வதற்காக அறவிடும் கட்டணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி இரண்டு கட்டணங்களும் சமமானதாக இருக்குமாயின், அது முரண்பாடாக அமையாதா என்பதையும்;

(v) இரண்டாவது அல்லது மூன்றாவது செயற்கை முறைக் கருவூட்டலின் போதும் மேற்கூறப்பட்ட கட்டணம் அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது அநீதியாக அமையாதா என்பதையும்;

(vii) செயற்கை முறைக் கருவூட்டல் ஆக்கத்திறனின் சதவீதம் யாதென்பதையும்;

(viii) பசுக்கள், ஆடுகள் மற்றும் பன்றிகள் போன்ற கால்நடைகளின் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பண்ணைகளுக்கு வருகைதரும் கால்நடை வைத்தியர்கள்/கால்நடை அபிவிருத்தி ஆலோசகர்களுக்குக் கட்டணம் செலுத்த வேண்டுமா என்பதையும்;

(ix) ஆமெனில், மேற்படி கட்டணங்கள் போக்குவரத்திற்காகவா அல்லது மருந்துகளுக்காகவா என்பதைப் பற்றுச்சீட்டுக்களில் வெவ்வேறாகக் குறிப்பிட வேண்டியதில்லையா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1245/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படைத் தலைமையகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தலைமையகத்திற்கும் சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி அலுவலர்கள் மற்றும் சிப்பாய்கள் எவ்வகையான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பணிகளுக்கும் சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தலைமையகங்களினால் பண்ணை நடவடிக்கைகளும் தொழில்முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பண்ணைகள் மற்றும் தொழில்முயற்சிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பண்ணைக்கும்/தொழில்முயற்சிக்கும் சொந்தமான நிலத்தின் அளவு, அவை அமைக்கப்பட்டுள்ள பிரதேசம் மற்றும் அவற்றுடன் சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் சிப்பாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பண்ணையினதும்/தொழில்முயற்சியினதும் வருமானம் மற்றும் செலவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1372/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்களது பெற்றோரை இழந்து, முறையான பராமரிப்பு இல்லாத பிள்ளைகள் என அடையாளங் காணப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிள்ளைகளின் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பிள்ளைகளை இனங்காணுதல் மற்றும் அவர்களை பராமரித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் அரச உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வுத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி உத்தியோகத்தர்களின் பணிப்பொறுப்பை மேற்பார்வை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1678/2025

கௌரவ லால் பிரேம்நாத்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மண்சரிவு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக மொறவக்க நீதவான் நீதிமன்றம் 2021ஆம் ஆண்டிலிருந்து கெட்டபரு ரஜமஹா விகாரையின் வளாகத்திலுள்ள கட்டிடமொன்றில் தற்காலிகமாக இயங்கி வருகின்றதென்பதையும்;

(ii) இக்கட்டிடத்திற்கான மாதாந்த வாடகையாக பெருந்தொகை பணம் செலவிடப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி தற்காலிக கட்டிடத்தில் காணப்படும் இடவசதி, பௌதீக வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் பற்றாக்குறை காரணத்தினால் நீதிமன்ற செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்ள முடியாதுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது ஏற்பட்டுள்ள நிதி ரீதியான நட்டத்தை தவிர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) நீதிவான் நீதிமன்றம் முன்னர் அமைந்திருந்த காணி சம்பந்தமாக புவிச்சரிதவியல் தரத்தை உறுதிப்படுத்தும் அறிக்கை இன்றளவில் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மொறவக்க நீதவான் நீதிமன்றத்தை நிரந்த கட்டிடமொன்றில் இயங்கச் செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1711/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தின் பிரதேசச் செயலாளர் பிரிவு களுக்கு வழங்கிய மொத்த நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அதன் கீழ் கல்வி, வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளுக்கு வழங்கிய நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஒதுக்கீட்டில் தற்போது வரை செலவிடப்பட்டுள்ள நிதி, மேற்படி (ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு துறை வாரியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களுள் 2025.12.31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்படவிருந்த கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 மார்ச் 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

746/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கையை விட்டு வெளியேறியுள்ள சட்டத்துறை தலைமையதிபதி திணைக்கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற, விசேட திறமையுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைக் காரணமாக, ஒரு உத்தியோகத்தர் சுமார் 200-300 கோப்புகளைக் கையாளுகிறார் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக ஏற்பட்டுள்ள தாமதத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

841/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் கொழும்பு, தேசிய கலாபவனம் புனரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி புனரமைப்புப் பணிகள் இதுவரையில் நிறைவடையவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அங்கு வைக்கப்பட்டிருந்த, விலைமதிக்க முடியாத, 42 பழமையான ஓவியங்கள் தற்போது காணாமல் போயுள்ளதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(v) இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1013/2025

கௌரவ ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நிலுவையில் உள்ள, விசாரணையில் உள்ள, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற மற்றும் தீர்க்கப்பட்ட நிதி தொடர்பான சைபர் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை மாகாணம் மற்றும் ஆண்டின் அடிப்படையில் யாதென்பதையும்;

(ii) நிதி தொடர்பான சைபர் குற்ற வழக்குகளை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எடுக்கின்ற சராசரிக் காலத்தினையும்;

(iii) நிதி மோசடி தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற சைபர் குற்றச்செயல் புலனாய்வுப் பிரிவுகள் அனைத்து மாகாணங்களிலும் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) நிதி தொடர்பான குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்குச் செயற்கை நுண்ணறிவினைப் (ஏ.ஐ) பயன்படுத்தி மோசடிகளைக் கண்டுபிடிக்கும் முறைமைகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதையும்;

(v) நிதி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவினைப் (ஏ.ஐ) பயன்படுத்தி மோசடிகளைக் கண்டுபிடிக்கும் முறைமைகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் உள்ளடங்கலாக, நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1186/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் என்றதொரு தேசிய பாடசாலை உள்ளது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு தேசிய பாடசாலைகளுள் ஒன்றான மேற்படி பாடசாலையின் கல்வி நிலை தற்போது பின்னடைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடங்கள், கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் தளபாடங்கள் உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(iv) அவ்வெற்றிடங்களை நிரப்பாமல் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த முடியாது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் தற்போது பணியாற்றும் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அப்பாடசாலையின் கல்விசாரா ஊழியர்களின் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களும் முழுமையாக நிரப்பப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பாடசாலையின் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1303/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி வலயங்களுக்கு இணைக்கப்பட்டு பதில் கடமை அடிப்படையில் ஆசிரிய ஆலோசகர்களாகவும் வளவாளர்களாகவும் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இந்த உத்தியோகத்தர்களில் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்களால் பதில் கடமை அடிப்படையில் ஆசிரிய ஆலோசகர்களாகவும் வளவாளர்களாகவும் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) நீண்டகாலமாக பதில் கடமை அடிப்படையில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1360/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முள்ளிக்குளம் பிரதேச மக்களுக்கு சொந்தமான காணிகள் 2007ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் கீழ் காணப்படுவதால், அப்பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரையில் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மக்கள் தமது வாழ்விடங்களில் மீள் குடியேற முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள 300இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு முறையான வீட்டு வசதிகள், வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் எதுவும் காணப்படாத நிலையில், அரசாங்கம் இந்த மக்களுக்கு இதுவரை வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iv) முள்ளிக்குளம் மக்களுக்கு சொந்தமான பாரம்பரிய காணிகள், வீடுகள், பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத்தலங்கள் தற்போது கடற்படையின் கீழ் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், இவற்றை விடுவித்து அவற்றை மக்களிடம் மீளக் கையளிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களின் நிரந்தர வாழ்விடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான நிரந்தர திட்டம் அல்லது குறிப்பிட்ட காலவரையறை காணப்படுகின்றதா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1407/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா பிரதேச செயலகத்தினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள, 2011ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை – வேப்பங்குளம் பிரதேசத்தில் 20 பேர்ச்சஸ் கொண்ட 125 காணித் துண்டுகளுக்கான அளிப்புப் பத்திரங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வழங்க வேண்டும் என்பதை அவர் அறிவாரா;

(ii) 14 வருடங்களுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத மேற்படி காணிகள், அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், மேற்படி காணிகளை வழங்கும் போது இருந்த பெறுமதியைக் கருத்தில் கொண்டு இச்சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படுமா;

(iv) மீள்மதிப்பீடு செய்யப்படும் காலப்பகுதி யாது;

(v) மீள்மதிப்பீடு செய்ததன் பின்னர், சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு காணி அளிப்புப் பத்திரங்களை வழங்கக் கூடிய காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1469/2025

கௌரவ சானக மாதுகொட,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, பெலிகஹ, புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி 2024 யூலை 19ஆம் திகதி திறந்துவைக்கப்பட்ட போதிலும் இதுவரை அங்கு வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி நீதிமன்றக் கட்டிடத்தொகுதியில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான உத்தேசக் காலப்பகுதி யாது;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய கட்டிடத்தொகுதியில் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் பேணிவரப்படுகின்ற காலி கோட்டை பண்டைய கட்டிடங்களையும் மேற்படி வளவையும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் யாவை;

(iv) காலி, பெலிகஹ, புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் கட்டிடங்கயையும் காணியையும் இதுவரை பயன்படுத்தப்படாதுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1514/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை திருகோணமலை துறைமுகத்தின் தொழிற்பாட்டு இலாபம்/ நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் குத்தகை அடிப்படையில் அல்லது வேறு அடிப்படையில் பல்வேறு தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தக் கம்பனிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகளால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய வரி அல்லது வேறு கட்டணங்கள் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், 2005 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அந்த கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் திருகோணமலை துறைமுகத்திற்குச் சொந்தமான முழுமையாக அல்லது பகுதியாக அரசாங்கத்திற்கு உரித்துடையதான இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் யாவையென்பதையும்;

(iii) திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் உள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1771/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய அபிவிருத்தி பணியகத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குரிய முறுத்தானை கிராம அலுவலர் பிரிவில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது அக்கருத்திட்டங்களின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 மார்ச் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1455/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் உள்ள 153 கிராம அலுவலர் பிரிவுகளில், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் பயன்படுத்தக்கூடிய பல்தேவை சேவை அலுவலகங்கள் (சேவாபியஸ) இல்லாத கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், தற்காலிகமாக மாற்று இடங்களில் இயங்கிவரும் அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) புனரமைக்கப்பட வேண்டிய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மலசலகூடங்கள், நீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாத அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(v) மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) மேற்படி குறைபாடுகள் பொது மக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதில் தடையாக உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) தரமான மற்றும் துரிதமான சேவையை வழங்கும் பொருட்டு மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குள்ள திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1502/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் வாழைச் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் வாழைச் செய்கையில் ஈடுபடுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வாழைப்பழங்களுக்கு நியாயமான விலை கிடைக்கப் பெறாமையால் இரத்தினபுரி மாவட்டத்தின் வாழைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) இரத்தினபுரி மாவட்டத்தின் வாழைச் செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1544/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை, வீ ஓய பிரதேசத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள நீர்த்தேக்கக் கருத்திட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் எந்த நிறுவனம்/கம்பனியின் மூலம் செயற்படுத்தப் படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றோ அல்லது செயற்படுத்தப் படாதென்றோ மக்களுக்கு உறுதியாக அறிவிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் காரணமாக மக்களுக்கேற்படும் பாதிப்பு மற்றும் சிரமங்கள் தொடர்பாக உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கருத்திட்டம் காரணமாக நேரடி மற்றும் மறைமுக அழுத்தங்களுக்குள்ளாகும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மண்சரிவு அபாயம் அதிகமாகவுள்ள வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள கேகாலை மாவட்டத்தின் மேற்படி பிரதேசத்தில் அமைந்துள்ள இரண்டு மலைகளுக்கு குறுக்கே மேற்படி நீர்த்தேக்கக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படும் அல்லது செயற்படுத்தப்படாதென்பது உறுதியாக அறிவிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1551/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இஸ்லாம் மார்க்க அறிஞர்களை உருவாக்குகின்ற அரபுக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன என்பதையும்;

(ii) மேற்படி கல்லூரிகள் வகைப்படுத்தலுக்கு அமைவாக மூன்று பிரிவுகளாக தரப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அரபுக் கல்லூரிகளுள் அதிகமானவை முதலாம் தரத்தைச் சார்ந்தவை என்பதனால், அவற்றை இரண்டாம் மற்றும் மூன்றாம் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி அரபுக் கல்லூரிகளை தரமுயர்த்துவதில் காணப்படும் தடைகள் மற்றும் நிபந்தனைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1558/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மன்றங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் உரிய வாக்காளர்கள், பிரிவுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ள அடிப்படை மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) அதன் மூலம், சில சபைகளுக்கும் வாக்காளர்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கான தீர்வுகள் வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மொரவெவ, கோமரன்கடவல, பதவி ஸ்ரீபுர, சேருவில மற்றும் வெருகல் ஆகிய ஐந்து பிரதேச சபைகளுக்கும் உரிய மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை விட மூதூர் பிரதேச சபையின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மக்கள் தொகை, கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மூதூர் பிரதேச சபை இரண்டு உள்ளூராட்சி மன்றங்களாகப் பிரிக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1716/2025

கௌரவ ஆர். ஜீ. விஜேரத்ன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசியக் கணக்கீட்டுப் பிரிவில் கடமையாற்றிய அலுவலர் ஒருவரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அலுவலரின் பெயர் யாது என்பதையும்;

(iii) குறித்த அலுவலருக்கான நீதி மற்றும் நியாயம் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொருளாதாரம் பற்றிய மிகவும் கூருணர்வுமிக்கதான தரவுகள் திரிபுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வேலைத்திட்டம் யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1721/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழில் சட்டங்கள் திருத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், திருத்தப்படும் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி திருத்தங்களில் ஈடுபட்டுள்ள வெளித்தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி திருத்தங்களை எக்காலப்பகுதிக்குள் செய்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1783/2025

கௌரவ திலிண சமரகோன்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் இபலோகம மற்றும் கெக்கிராவ பிரதேச செயலகப் பிரிவுகளில், 621-இஹலகம, 510-கடியங்கல்ல மற்றும் 502-மானேவ கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை பற்றி அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களின் பெயர்கள் மற்றும் அவை நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி 03 வீடமைப்புக் கருத்திட்டங்களினதும் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பயனாளிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் உதவித்தொகையாக வழங்கப்பட்டனவா அல்லது கடன் தொகையாக வழங்கப்பட்டனவா என்பதையும்;

(v) மேற்படி பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை, நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது மேற்படி வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட வருமான அடிப்படை யாதென்பதையும்;

(vii) மேற்படி பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்த அவர்களின் வருமான நிலைமை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1822/2026

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ. டி. சூரியபண்டார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தாபிக்கப்படுவதற்கு முன்னர், மோட்டார் வண்டியொன்றினை பதிவு செய்யும் பொறுப்புடைய நிறுவனமாக செயலாற்றிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) இலங்கையில் முதன் முதலாக மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iv) மேற்படி வருடத்திலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தாபிக்கப்படும் வரை பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2025 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியாகின்ற போது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மோட்டார் வாகனங்களுக்கு புகை உமிழ்வுச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை மூலம் அரசாங்கம் ஏதேனும் வருமானத்தை வருடாந்தம் ஈட்டுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2025 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1860/2026

கௌரவ ருவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொணராகலை மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள கேட்போர் கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புத்தல துட்டகைமுனு மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகளில் தாமதமெதுவும் நிலவுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 மார்ச் 20, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

24/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டிருந்தபோது பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகிய, இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இவர்களில், இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவ்வாறு இன்னல்களுக்கு உள்ளாகும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

121/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியின் பதவிக் காலத்தில் சனாதிபதி செயலகத்தின் வாகனத் தொகுதியில் காணப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனத் தொகுதியிலிருந்து ஏனைய அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலை தொடர்ந்து மேற்படி வாகனங்களில் சனாதிபதி செயலகத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் மீளப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் சனாதிபதி செயலகத்தின் வாகனத் தொகுதியில் காணப்படுகின்ற உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ வாகனங்களின் பயன்பாடு தொடர்பான கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

208/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘லெக்மியுலெஸ்’ தடுப்பூசிகளை கொள்வனவு செய்தபோது மருத்துவ வழங்கற் பிரிவில் இடம்பெற்றுள்ள மோசடி தொடர்பாக அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடி தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட அலுவலர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி மோசடி தொடர்பாக மேற்கொண்டுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

231/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் தலைமை அதிபதியின் கீழ், சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்காக ‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’ கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகம் ஒவ்வொன்றுக்குமென இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்காக இதுவரையில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

356/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தின் வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அமைச்சினால் மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வவுணதீவில் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன என்பதையும்;

(ii) அதில் பெரும்பாலான வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் அவை குறைபாடுகளுடன் உள்ளதென்பதையும்;

(iii) அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் குறித்த வீடுகளின் நிர்மாணிப் பணிகளை பூர்த்தி செய்யவில்லை என்பதையும்;

(iv) அதன் காரணமாக, இன்றளவில் 8 வருடங்களுக்கும் மேலாக அந்த மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அந்த வீடுகளின் நிர்மாணப் பணிகளை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி வீடுகளின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த்திசெய்யப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

465/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் சீனி, பால் மா, பருப்பு, அரிசி, கோதுமை மா மற்றும் தேங்காய் ஆகியவற்றின் மொத்த நுகர்வை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேலுள்ள பொருட்களின் ஒவ்வொரு ஆண்டிற்குமான நுகர்வினை 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேலுள்ள (i) மற்றும் (ii) இன் பிரகாரம் தனிநபர் நுகர்வை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளினதும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அளவு ஆகியவற்றினை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளினதும் இறக்குமதிப் பெறுமதியை அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபாவில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருள் மீதும் விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வை எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(vii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளினதும் தீர்வை உள்ளடங்கலான விலை எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளினதும் உற்பத்திச் செலவு மற்றும் சில்லறை விலை ஆகியன எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(ix) இலங்கையில் மேலுள்ள பொருட்களின் உற்பத்திச் செலவுக்கிடையில் காணப்படும் குறிப்பிடத்தக்க வேறுபாட்டுக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

553/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் திரு ரோஹன விஜேவீரவின் மனைவி மற்றும் பிள்ளைகளின் பெயர்கள் யாவை;

(ii) திரு ரோஹன விஜேவீரவின் படுகொலையின் பின்னர் இற்றைவரை அவர்கள் வாழ்ந்துவந்த ஒவ்வொரு இடம் மற்றும் மேற்படி ஒவ்வொரு இடத்திலும் வாழ்ந்த காலப்பகுதி தனித்தனியே யாது;

(iii) அவர்களின் பராமரிப்புச் செலவினம் இலங்கை அரசினால் மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ஆண்டுவாரியாக தனித்தனியே எவ்வளவு;

(iv) அவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை வேறு எவரேனும் ஆள் அல்லது குழுவொன்று ஏற்றுக்கொண்டிருப்பின், அவ்வாறு பராமரித்த காலப்பகுதி மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனித்தனியே யாது;

(v) அவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி உதவி கிடைத்துள்ளதா;

(vi) ஆமெனில், நிதி உதவி வழங்கிய நாடு, ஆட்கள் மற்றும் நிதி உதவி வழங்கப்பட்ட காலப்பகுதி தனித்தனியே யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

566/2025

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் 'குதங்களுக்கான பற்றுச்சீட்டு நிதியீட்டு முறைமைக் கருத்திட்டம்' எனும் பெயரில் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இன்றளவில் நிறுவப்பட்டுள்ள களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை முன்னெடுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

640/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் அரிசி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலம் அறவிடப்பட்ட அபராதத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி தொடர்பாக மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகளை மேலும் அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1311/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அல்லது சுற்றுலா அல்லது பிற நடவடிக்கைகளுக்காக மாலைத்தீவுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை மற்றும் இலங்கைக்கு வருகை தந்த மாலைத்தீவு நாட்டவர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மாலைத்தீவுக்கு சுற்றுலா செல்லும் இலங்கையர்களுக்கு 'வருகைக்கு பின்னரான வீசா' (visa on arrival) வழங்குவதால் இலங்கைக்குக் கிடைக்கும் அனுகூலம் யாதென்பதையும்;

(iii) தொண்ணூறு நாள் இலவச வீசா வசதிகள் மாலைத்தீவுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு மட்டுமா வழங்கப்படுகிறது என்பதையும்;

(iv) இன்றேல், இலங்கைக்கு வருகைதரும் மாலைத்தீவு நாட்டவர்களுக்கும் மேற்படி வசதிகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?